# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2369/07 - 2024 ජනවාරි මස 29 වැනි සඳුදා - 2024.01.29

*2369/07 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்***

*22 (அ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 22அ என்னும் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான இடப்பரப்பு, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக உரிமமளிக்கப்பட்ட வலயமொன்றாக இருக்குமென இக்கட்டளை மூலம் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

***ரணில் விக்கிரமசிங்க,***
*சனாதிபதி.*

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
*2024, சனவரி 24.*

**அட்டவணை**

*தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் மாகம்பத்துவில் முறையே மிரிஜ்ஜவில, ஆரபொக்க, பல்லே பேரகம, கிரிவில, கொஹொலன்கல மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள “ஆரபொக்க” எனவழைக்கப்படும் காணியாகவுள்ளதும், இலங்கைத் துறைமுக அதிகார சபையின் நீரியல் அளவைப் பிரிவின் பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற அளவையாளர் எஸ். ஆர். இலேபெருமாச்சி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016, சனவரி*


1A – PG 6632 – 05 (2024/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

22 ஆந் திகதிய S/Mis/450 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டுகள் இல. 1, 2, 3, 4 மற்றும் 5 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டுகள் அடங்கலும் ; அச்சொல்லப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு :-

**காணித்துண்டு இல. 01**

வடக்கு : மகாவலி அதிகார சபையின் காணி, கடுவெவ மற்றும் எல ;
கிழக்கு : வீதி (விரைவுப் பாதை) ;
தெற்கு : வீதி (விரைவுப் பாதை), மகாவலி காணி மற்றும் 100 அடி வீதி (விரைவுப் பாதை) ; அத்துடன்
மேற்கு : 100 அடி வீதி (விரைவுப் பாதை) மற்றும் மகாவலி அதிகார சபையின் காணி.

அத்துடன் பரப்பளவில் இது, ஐநூற்றுப் பதினேழு ஏக்கர்கள், ஒரு றூட் மற்றும் இருபத்தாறு பேர்ச்சுக்களை (517ஏ. 01றூ. 26பே.) அல்லது இருநூற்று ஒன்பது தசம் மூன்று ஒன்பது ஹெக்டெயர்களைக் (209.39 ஹெக்டெயர்கள்) கொண்டுள்ளது ; அத்துடன்-

**காணித்துண்டு இல. 02**

வடக்கு : மகாவலி அதிகார சபையின் காணி மற்றும் வீதி (விரைவுப் பாதை) ;
கிழக்கு : காணித்துண்டு இல. 3 ;
தெற்கு : இலங்கைத் துறைமுக அதிகார சபையின் காணி ; அத்துடன்
மேற்கு : 100 அடி வீதி (விரைவுப் பாதை) மற்றும் மகாவலி அதிகார சபையின் காணி.

அத்துடன் பரப்பளவில் இது, இருநூற்றுப் பதினேழு ஏக்கர்கள், மூன்று றூட்கள் மற்றும் மூன்று பேர்ச்சுக்களை (217ஏ. 03றூ. 03பே.) அல்லது எண்பத்தெட்டு தசம் ஒன்று மூன்று ஹெக்டெயர்களைக் (88.13 ஹெக்டெயர்கள்) கொண்டுள்ளது ; அத்துடன்-

**காணித்துண்டு இல. 03**

வடக்கு : காணித்துண்டு இல. 2 மற்றும் வீதி (விரைவுப் பாதை) ;
கிழக்கு : காணித்துண்டு இல. 4 ;
தெற்கு : காணித்துண்டு இல. 4, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் காணி மற்றும் காணித்துண்டு இல. 2 ; அத்துடன்
மேற்கு : காணித்துண்டு இல. 2 மற்றும் வீதி (விரைவுப் பாதை).

அத்துடன் பரப்பளவில் இது, நூற்றியொரு ஏக்கர்கள், இரண்டு றூட்கள் மற்றும் முப்பத்துமூன்று பேர்ச்சுக்களை (101ஏ. 02றூ. 33பே.) அல்லது நாற்பத்து ஒன்று தசம் ஒன்று ஆறு ஹெக்டெயர்களைக் (41.16 ஹெக்டெயர்கள்) கொண்டுள்ளது ; அத்துடன்-

**காணித்துண்டு இல. 04**

வடக்கு : காணித்துண்டு இல. 3, வீதி (விரைவுப் பாதை) மற்றும் காணித்துண்டு இல. 5 ;
கிழக்கு : காணித்துண்டு இல. 5 ;
தெற்கு : காணித்துண்டு இல. 5, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் காணி மற்றும் காணித்துண்டு இல. 3 ; அத்துடன்
மேற்கு : காணித்துண்டு இல. 3.

அத்துடன் பரப்பளவில் இது, நூற்று தொண்ணூற்று ஒரு ஏக்கர்கள் மற்றும் இருபத்தைந்து பேர்ச்சுக்களை (191ஏ. 0றூ. 25பே.) அல்லது எழுபத்தேழு தசம் மூன்று ஆறு ஹெக்டெயர்களைக் (77.36 ஹெக்டெயர்கள்) கொண்டுள்ளது ; அத்துடன்-

**காணித்துண்டு இல. 05**

வடக்கு : வீதி (விரைவுப் பாதை) ;
கிழக்கு : வீதி (இலங்கைத் துறைமுக அதிகார சபை) மற்றும் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் காணி ;
தெற்கு : இலங்கைத் துறைமுக அதிகார சபையின் காணி ; அத்துடன்
மேற்கு : காணித்துண்டு இல. 4.

*அத்துடன் பரப்பளவில் இது, ஐநூற்று ஏழு ஏக்கர்கள், இரண்டு றூட்கள் மற்றும் இருபத்தெட்டு பேர்ச்சுக்களை (507ஏ. 02றூ. 28பே.) அல்லது இருநூற்று ஐந்து தசம் நான்கு ஐந்து ஹெக்டெயர்களைக் (205.45 ஹெக்டெயர்கள்) கொண்டுள்ளது ;*

*அத்துடன் 2016, சனவரி 22 ஆந் திகதிய* S/Mis/*450 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய மொத்தப் பரப்பளவில் இது, ஆயிரத்து ஐநூற்று முப்பத்து ஐந்து ஏக்கர்கள், இரண்டு றூட்கள் மற்றும் முப்பத்தைந்து பேர்ச்சுக்களை (1535ஏ. 02றூ. 35பே.) அல்லது அறுநூற்று இருபத்து ஒன்று தசம் நான்கு ஒன்பது ஹெக்டெயர்களைக் (621.49 ஹெக்டெயர்கள்) கொண்ட மேலே சொல்லப்பட்ட காணித்துண்டுகள் இல. 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகியவற்றைக் கொண்டுள்ளது.*

EOG *02-0222*